வெளியிடப்படுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டாவது அந்த நூலை அவர்களுக்குத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு வெளியிடுகின்ற நூலை, அதாவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் குறிப்பிடுகின்ற நூலை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணம் இன்றியே வழங்குகின்ற வகையிலே ஒரு ஆலோசனையை, பரிந்துரையை மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் கொடுத்து அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதை ஆறு பகுதியில் நில ஆக்கிரமிப்பு.

*வினா எண் 48—திரு. மி. வின்செண்ட், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே காலியாக இருக்கும் சுமார் 400 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் தனிப்பட்ட முதலாளிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது, அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே வரும் நிலப்பரப்பு ''வீரப்புலி ஒதுக்கப்பட்ட காடுகள்'' எனப்படும். இதில், வனத்துறையினரால் 341 ஏக்கர் நிலம் சுமார் 15 பேர்களுக்கு 1963 ம் வருடம் முதல் நீண்ட கால குத்தகையாக ஏலக்காய் சாகுபடிக்கு என்று கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்களை பெரும் பணக்காரர்கள் குத்தகை என்ற பெயரால் பல ஆண்டுகளாக வைத்துக்கொண்டு வருகிறார்களே, அதை மீட்டு ஏழைகளுக்கு வழங்குகின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழ்நாட்டிலே இருந்து வருவதாலே, அதைக் கவனத்தில் கொண்டு தமிழக அரசு கடந்த ஒரு ஆண்டிற்கு முன்னாலே சில விதிகளை உருவாக்கி இருக்கிறது. பல்வேறு இடங்களிலே உள்ள அரசுக்குச் சொந்தமான இப்படிப்பட்ட நிலங்களை நிலச்சுவான்தார்கள் குத்தகை என்ற பெயராலே நீண்ட காலம் பரம்பரை பாத்தியதையாக அனுபவித்து வருவதை தடுக்கும் நோக்கத்தோடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இத்தகைய குத்தகைகள் முடிவு அடைகின்ற போது அவைகளை மீண்டும் புதுப்பிக்கக்கூடாது என்றும் உத்தரவுகள் இடப்பட்டு, அப்படி கைப்பற்றப்படும் நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வீதம் குத்தகைக்கு விடலாம் என்ற கொள்கையும் எடுக்கப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை எடுத்துள்ள பெரும் பணக்காரர்கள் யார் யார் ? பாலமோர் எஸ்டேட் முதலாளிகளின் பெயர்களிலும் அவர்களின் குடும்பத்தினரின் பெயர்களிலும் எத்தனை ஏக்கர் நிலங்கள் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது போன்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தெரிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை எடுத்தவர்களுடைய பட்டியல் என்னிடம் இருக்கிறது. அவர்களுடைய சொத்து விவரம் என்னிடத்திலே இல்லை. அவர்களிலே யார் யார் பெரும் முதலாளிகள் என்பதும் எனக்குத் தெரியாது. பட்டியலை வேண்டுமானல் படிக்கிறேன்:

திரு. எம். ஆர். மோரிஸ் ..	6 ஏக்கர் நிலம் தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கே 4 தலைப்புகளில் 6 ஏக்கர்கள் வீதம் 24 ஏக்கர்கள்.
டாக்டர் மத்யாஸ்	24 ஏக்கர் — இன்னொரு தலைப்பில் 22 ஏக்கர்.
திருமதி ரோஸம்மாள் மத்யாஸ்.	32 ஏக்கர். அவர்களுக்கே மேலும் 8 ஏக்கர்கள், 7 ஏக்கர்கள் தரப்பட்டிருக்கின்றன.

திரு. தாமஸ் வர்க்கீஸ்	..	43 ஏக்கர்.
திருமதி கீதா ஜார்ஜ்	..	38 ஏக்கர்.
திரு. வி. ஓ. ஸி. பிள்ளை	..	44 ஏக்கர்.
திரு. ஏ. ஓ. மாத்தியூ	..	31 ஏக்கர்.
திரு. எல் ஏ. ஜேக்கப்	..	32 ஏக்கர்.
திரு. மோஸி வர்க்கீஸ்..	..	33 ஏக்கர்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலமோர் தோட்ட அதிபர்களின் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படி பல தலைப்புகளில் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதே அவைகளை ரத்து செய்து, அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட கேசவன்புதூரிலிருந்து கீரிப்பாறைவரை நிலமில்லாத ஏராள ஏழை எளியவர்கள், சாலை ஓரங்களில் வசிக்கிறார்கள்—அவர்களுக்கு இந்த நிலங்களை எடுத்து கொடுக்க அரசு முன் வருமா? தவிர, இதேபோல, நியூ ஆவம்பாடி,, சி. எம். எஸ். வின்ஸ் டாக்டர் போன்ற பகுதிகளிலும் தேவகிரி போன்ற தனியார் முதலாளிகளிடம் ஏராளம் புறம்போக்கு நிலங்கள் குத்தகை எடுத்து அனுபவித்து வருகிறார்கள். அவைகளை எடுத்து சிற்றார் அணைக்கட்டு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தங்கள் சில 63ஆம் ஆண்டிலிருந்து 88 ஆம் ஆண்டு வரையிலும், சில 67 ஆம் ஆண்டிலிருந்து 92 ஆம் ஆண்டு வரையிலும் கூட செய்யப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்கிற உரிமை அரசுக்கு இல்லை என்று அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடுப்பு ஆணை பெற்றிருக்கிற காரணத்தினால், அரசு இதில் தீவிரமாக தலையிட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு சில பிரச்னைகளைக் குறித்தும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு தனியாகக் கேள்வி போட்டால் தக்க ஆதாரங்களோடு விடைகளைச் சேகரித்துத் தரமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குத்தகை காலம் எவ்வளவு என்று வினவலாம் என்று நினைத்திருந்தேன். அமைச்சர் அவர்களே பதில் அளித்து விட்டார்கள். அதிலுள்ள மற்ற கண்டிஷன்கள் என்ன என்பதை தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்? (மணியடிக்கப்பெற்றது).

1981 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிஷன்கள் எல்லாம் இடத்திற்கு இடம் மாறுபடும். அவைகளின் எண்ணிக்கை அதிக மாக இருக்கும். அவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகும். உட்காருங்கள்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான 400 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கக் கூடியவர்களைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அதேபோல தமிழகத்திலே ஆலயங்களுக்குச் சொந்தமான தரிசாக இருக்கக்கூடிய பல ஏக்கர் நிலங்களையும் இப்படிப்பட்ட முதலாளிகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலங்களை அரசாங்கம் அவர்களிடமிருந்து பெற்று, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கமே நேரிடையாகக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க முடியுமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வனத்துறை சம்பந்தப்பட்ட கேள்விதான் மூலக் கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற் கான பதில்களைத்தான் துணை வினாக்களுக்கும் நான் அளித்து வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறை பற்றிய கேள்வியை கேட்கிறார்கள். தனியாக கேள்வி கேட்டால் தக்க பதில் தர முடியும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவுச் சின்னம்.

* வினா எண். 49—திரு. க. இரா. சின்னராசு, திரு. ப. நெடு மாறன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைந் துள்ள தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் சமாதியை நினைவுச் சின்னம் ஆக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான முன் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவாவின் சமாதியைச் செப்பனிட்டு அங்கு ஒரு நினைவுத் தூண் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.